SRI LANKA

## இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் I பரீட்சை – ஜனவரி 2023
**(Level I Examination - January 2023)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (104) வணிகச் சூழல் (BEN)

**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்**
இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 540, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் I பரீட்சை – ஜனவரி 2023

## (104) வணிகச் சூழல்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

இருபது (20) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 40 புள்ளிகள்)

**பகுதி A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**1.1** (4)

**1.2** (3)

**1.3** (1)

**1.4** (1)

**1.5** (4)

**1.6** (3)

**1.7** (2)

**1.8** (1)

**1.9** (4)

**1.10** (3)

*(02 புள்ளி வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)*

**1.11** தவறானது

**1.12** சரியானது

**1.13** தவறானது

**1.14** சரியானது

**1.15** தவறானது

*(02 புள்ளி வீதம், மொத்தம் 10 புள்ளிகள்)*

**1.16**

தூரநோக்கு என்பது வணிகத்தின் அதன் சுபீட்சங்கள் தொடர்பான கனவு ஆகும். தூரநோக்கானது வணிகத்தை அதன் பணிக்கூற்றை நோக்கி வழிகாட்டுகிறது. தூரநோக்கு என்பது ஒரு இலக்கு அல்ல, ஆனால் வணிகத்தினை வழிநாடத்தும் ஒரு தனித்துவமான எதிர்பார்ப்பு ஆகும்.

பணிக்கூற்று என்பது ஏனைய போட்டியாளர்களிடமிருந்து நிறுவனம் எவ்வாறு வேறுபடுகிறது என்பதை விபரிக்கும் ஒரு கூற்று ஆகும். அது வணிகத்தின் நிலைத்திருப்பை விளக்குகிறது. தூரநோக்கு சரியான திசைமுகப்படுத்தலை வழங்குவதற்கு, வணிகம் பணிக்கூற்றை அடைந்துகொள்ளுதல் வேண்டும்.

*(02 புள்ளிகள்)*

**1.17 இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் செயற்றிறனை அதிகரிக்கும் வழிகள்:**

1. சூழலை செயற்படுத்துதல்
2. நவீன பொருத்தமான தொழிநுட்பம்
3. முயற்சியாண்மைக் கலாச்சாரம் மற்றும் திறன் விருத்தி
4. நிதிக்கான அணுகல்
5. சந்தை வசதி
6. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
7. வள வினைத்திறன்
8. பிராந்திய சமப்பாடு

*(02 புள்ளிகள்)*

aat SRI LANKA

**1.18 போர்ட்டரின் ஐந்து காரணிப் பகுப்பாய்வு**

1. தொழில்துறையின் புதிதாக உள்நுழைபவர்களது அச்சுறுத்தல்
2. வழங்குனர்களின் பேரம் பேசும் சக்தி
3. கொள்வனவாளர்கள் அல்லது வாடிக்கையாளர்களின் பேரம் பேசும் சக்தி
4. பிரதியீட்டு உற்பத்திகளின் அச்சுறுத்தல்
5. தொழிற்துறையில் ஏற்கனவேயுள்ள போட்டியாளர்களிடையே போட்டி

*(02 புள்ளிகள்)*

**1.19**

உள்ளகத் தொழில் முயற்சியாண்மை என்பது வணிக நிறுவனங்களில் படைப்பாற்றல் மூலம் ஊழியர்கள் உருவாக்கும் புத்தாக்கங்கள் ஆகும். தொழில் முயற்சியாண்மை என்பது நிறுவனத்திற்குள் இருந்து, ஏற்கனவே உள்ள வணிக நிறுவனத்தில் முக்கிய பதவிகளை வகிக்கும் படைப்பாற்றல் மிக்க நபர்கள் பெரும்பாலும் தங்கள் படைப்பாற்றல் திறமைகளை பயன்படுத்தி வணிகத்தின் உற்பத்திகள் மற்றும் வணிகத்தின் உற்பத்திகளை உருவாக்குதல்

ஆகும். இது நிறுவனத்திற்குள் படைப்பாற்றல் மிக்கவா்கள் முக்கிய பதவிகளை வகிப்பதுடன், மேலும் அவர்களின் படைப்பாற்றலை புத்தாக்கங்களாக மாற்றுகின்ற போது இது இடம்பெறும்.

*(02 புள்ளிகள்)*

**1.20**

பல்வேறு நாடுகளும் வெவ்வேறு தத்துவாசிரியர்களும் கூட்டுவணிக சமூகப் பொறுப்பை (CSR) சூழ்நிலைகளின் அடிப்படையில் வெவ்வேறு வழிகளில் வரைவிலக்கணம் செய்துள்ளமையால், CSR என்பதற்கு உலகளாவிய ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணக்கரு எதுவும் இல்லை. கீழே CSR என்பதற்கான கருத்தின் வேறுபட்ட விளக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன:

- நாட்டின் மற்றும் அதன் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கைத் தரங்களின் மேம்பாடு, மற்றும் நாட்டின் சமூகநீதியின் விருத்தி ஆகியவற்றுக்குப் பங்களிப்பில் அர்ப்பணிப்பது வணிகங்களின் பொறுப்பாகும்.

- வணிகத்தின் சமூகப் பொறுப்பானது ஏமாற்று அல்லது மோசடிகளில் ஈடுபடாது, திறந்த மற்றும் சுயாதீனமான போட்டியில் ஈடுபடத்தக்க வகையில் விதிகளுக்கு இணக்கமான வகையில் தொழிற்பட்டு அதன் வளங்களைப் பயன்படுத்தி இலாபத்தன்மையை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுதல் ஆகும்.

- சமூகப் பொறுப்பு என்பது ஒரு வணிகத்தின் அதன் வணிக நடவடிக்கைகள் மற்றும் அதன் காரணமாக சமூகத்தில் விளையும் தாக்கம் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருத்தலாகும்.

- மக்களுக்கான சிறந்த பொருளாதார விருத்தி, ஊழியர்களை மதித்தல், ஊழியர்களது திறன்களை மேம்படுத்துதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் தார்மீக நிறுவனங்களை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கான வணிகக் கட்டமைப்பை உருவாக்குவது சமூகப் பொறுப்பாகும்.

- வணிகங்கள் சமூகத்திற்குத் திருப்பித் தருவனவே சமூகப் பொறுப்பாகும்.

- ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் அதேபோல், உள்நாட்டு சமூகம் மற்றும் சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, நெறிமுறையுடன் நடந்துகொள்வதற்கும் பொருளாதாரத்திற்கு பங்களிப்பதற்குமான வணிகத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு.

*(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 40 புள்ளிகள்)*

***பிரிவு A முடிவு***

aat SRI LANKA

*(மொத்தம் 40 புள்ளிகள்)* **பிரிவு B**

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 01 II – வணிக அமைப்புக்கள்***

**(a)**

- கம்பனியின் பெயர் மற்றும் இலக்கம்
- கம்பனி கூட்டிணைக்கப்பட்ட திகதி
- கம்பனி பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியா அல்லது வரையறுக்கப்படாத கம்பனியா
- கம்பனி ஒரு தனியார் கம்பனியா
- கம்பனி ஒரு கரைகடந்த கம்பனியா

***(03 புள்ளிகள்)***

**(b) பொது வரையறுக்கப்பட்ட கம்பனிகளால் பொருளாதாரத்திற்கு ஏற்படும் நன்மைகள்**

1. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அதிகரித்த பங்களிப்பு
2. அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்
3. பொருளாதார (உலக பொருளாதாரம் உட்பட) போட்டியை வெற்றியுடன் எதிர்கொள்ளும் இயலுமை
4. நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் அதை நாட்டில் மேம்படுத்துதல்
5. பங்குச்சந்தை, மூலதனச்சந்தை மற்றும் தொடர்புடைய அமைப்புகளின் விருத்திக்குதவும்
6. பங்குச்சந்தையில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை அதிகரித்து, பங்குச்சந்தை விருத்தியடையும்.
7. பொது மக்களின் சேமிப்பு பங்கு சந்தை மூலமான பொது வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மீதான முதலீடுகள் மூலம் பொருளாதாரத்திற்குப் பாய்ச்சலடையும்

***(04 புள்ளிகள்)***

**(c) கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 06 இன் படி:**

- நிரற்படுத்திய கம்பனி தவிர வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் பெயர் வரையறுக்கப்பட்ட, அதாவது Limited அல்லது அதன் சுருக்கம் Ltd என முடிவடையும்.
- தனியார் கம்பனியின் பெயர் (தனியார்) வரையறுத்த, அதாவது (Private) Limited அல்லது அதன் சுருக்கம் (Pvt) Ltd) என முடிவடையும்.
- நிரற்படுத்திய கம்பனியான பொது வரையறுத்த கம்பனியின் பெயர் பொது வரையறுத்த கம்பனி, அதாவது Public Limited Company அல்லது அதன் சுருக்கம் PLC என முடிவடையும்.

***(03 புள்ளிகள்)***

*(மொத்தம் 10 புள்ளிகள்)*



aat SRI LANKA

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

| ***அத்தியாயம் 03 – வணிகத்தின் துணைச்சேவைகள்*** |
| --- |

**(a)**

1. மோட்டார் வாகன விபத்துக்கள்
2. தீ
3. இயற்கை அனர்த்தம்

*(02 புள்ளிகள்)*

**(b)**

1. **வணிக இழப்புகளின் நிச்சயமற்ற தன்மை குறைக்கப்படுகிறது.**

   வணிக உலகில், ஏராளமான சொத்துக்கள் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த சொத்துக்கள் பல்வேறு காரணங்களால் சேதமடையக்கூடும். ஒரு காப்புறுதிக் கொள்கையின் மூலம் நட்டங்கள் குறைக்கப்படலாம்.

2. **வணிகத்தின் வினைத்திறனை அதிகரித்தல்**

   இழப்பின் நிச்சயமற்ற தன்மை வணிகர்களின் மனதை பாதகமாகப் பாதிக்கக்கூடும். காப்புறுதி நிச்சயமற்ற தன்மையினை நீக்கி, வணிகர்களை கடினமாக உழைக்கத் தூண்டுகின்றது.

3. **வணிக பங்களிப்பு**

   எந்தவொரு வியாபாரமும் குறிப்பாக எந்தவொரு பங்காளரது மரணத்திலும் மூடப்படக்கூடும். காப்பீட்டுக் கொள்கைகள் பங்காளரின் மரணத்தின் போது போதுமான நிதியை வழங்கும். சொத்துக் காப்புறுதியின் உதவியுடன் வணிகமானது பேரழிவு மிகப்பெரிய விரயங்கள் அல்லது இழப்புகளுக்கு எதிராகப் பாதுகாக்கப்படுகிறது.

4. **கடனை மேம்படுத்துதல்**

   காப்புறுதிக் கொள்கையைக் கடனுக்கான பிணையாக வைத்து வணிகம் கடனைப் பெறலாம். காப்பீடு செய்தவர்களது மரணத்தின் போது நிச்சயமாக செலுத்தப்படத்தக்க தொகை காரணமாக அவர்கள் அதிக கடன்களைப் பெற முடியும்.

5. **ஊழியர்களின் நலன்**

   ஊழியர்களின் நலன் என்பது தொழில்தருனரின் பொறுப்பாகும். காப்புறுதி வசதியை வழங்குதல் ஊழியர்களின் நலன்புரி வசதிகளை மேம்படுத்தும். இது வேலையின் பெறுபேற்றை நோக்கிய ஊக்குவிப்பை அதிகரிக்கச் செய்கிறது.

*(04 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(c)**

1. பொருட்களின் விநியோகத்திலான தாமதம், அதனால் வாடிக்கையாளர் எண்ணிக்கையில் சரிவு
2. மேலதிக போக்குவரத்து செலவு
3. விபத்துகள் மற்றும் இழப்பீடுகள்
4. பொருட்களை சரியான நேரத்தில் உற்பத்தி செயன்முறைக்கு கொண்டு செல்வதில் சிரமம்
5. ஊழியர்களை நிறுவனங்களுக்கு கொண்டு செல்வதில் தாமதம்

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 04 - வணிக அமைப்புக்களில் வியாபாரம்***

***அத்தியாயம் 05 - வணிகத்தின் மீதான அரசின் செல்வாக்கு, வணிக நெறிமுறைகளின் முக்கியத்துவம் மற்றும் வணிகம் ஒன்றின் சமூகப் பொறுப்பு***

**(a) வணிகத்திடமிருந்து வாடிக்கையாளருக்கு [B2C]**

இது வணிகத்தினால் நுகர்வோருக்கென இணையதளம் மூலம் மேற்கொள்ளப்படும் மின்னணு வர்த்தகத்தின் வகையாகும். இது பெரும்பாலும் மின்னணு சில்லறை விற்பனை அல்லது E-tailing எனப் பிரபலமாகக் குறிப்பிடப்படும்.

உதாரணம்: கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் தொடரூந்தின் ஆசனத்தை இணையம் மூலம் முன்பதிவு செய்தல்

*(02 புள்ளிகள்)*

**(b)**

| இலத்தரனியல் வர்த்தகத்தின் நுகர்வோருக்கான நன்மைகள் | இலத்தரனியல் வர்த்தகத்தின் நுகர்வோருக்கான தீமைகள் |
|---|---|
| உற்பத்தித் தெரிவு வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் | பொருட்களை பௌதீகரீதியாக ஆய்வு செய்ய இயலாமை |
| கட்டளையிடல் எளிதானது | இலத்திரனியல் சாதனங்களை அமைப்பதற்கான ஆரம்ப செலவு |
| நேரத்தையும் முயற்சியையும் சேமித்தல் அல்லது குறைந்த நேர விரயம் | ஊடுசெயல் பாதுகாப்பு விழிப்புணர்வின்மை |
| புதிய பொருட்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு | நுகர்வோர் அவநம்பிக்கை அல்லது இலத்திரனியல் வர்த்தகத்தை தொடர்பான எதிர்க்கணிய மனப்பாங்கு (வாடிக்கையாளர் தாம் கட்டளையிட்ட அதே பொருளைப் பெற முடியுமா என்பது தொடர்பான அவநம்பிக்கை உணர்வு) |
| காசு மீதிகளை வங்கியிலிருந்து மீளப்பெற வேண்டிய அவசியமில்லை, இலத்திரனியல் பணத்தை பயன்படுத்த முடியும் | இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு ஒரு பெரிய ஆரம்ப செலவு காணப்படுதல் |

*(04 புள்ளிகள்)*

(c)

| நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் வகிபாகம் |
|---|---|
| இலங்கை வணிக அபிவிருத்தி மையம் (Sri Lanka Business Development Center) | 1. பயிற்சியளித்தல் மற்றும் வழிகாட்டல் மூலம் முகாமைத் திறன்களை மேம்படுத்துதல்<br>2. இலங்கையின் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் திட்டமிட்டு வினைத்திறன்மிக்க வகையில் வணிகத்தை மேற்கொள்வதற்குஅவசியமான உட்கட்டமைப்பை உருவாக்குதல்<br>3. தொழில் முயற்சியாண்மையை ஊக்குவித்தல் |
| தேசிய வடிவமைப்பு நிறுவகம் (National Institute of Design) | 1. புதிய வடிவமைப்பு போட்டிகளை ஒழுங்குபடுத்துதல்<br>2. புதிய வடிவமைப்புகள் அல்லது தொழிற்துறை வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல்.<br>3. ஏற்றுமதி சந்தைகளுக்கு வழங்கக்கூடிய புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல் |
| கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகம் (Industrial Technology Institute) | 1. தொழிற்துறைகளுக்கு தொழிற்திறன் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.<br>2. தொழிற்திறன் பயிற்சியளித்தல் திட்டங்களை நடாத்துதல்.<br>3. தகவல் மையங்கள் மூலம் தொழிற்திறன் அறிவைப் பரப்புதல் |
| இலங்கை பொதியிடல் நிறுவகம் (Sri Lanka Institute of Packaging) | 1. புதிய பொதியிடல் முறைகளை அறிமுகப்படுத்துதல்<br>2. பொதியிடல் கற்கைநெறிகளை ஏற்பாடு செய்தல்<br>3. பொதியிடலில் உள்ள இடையூறுகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்தல் |
| தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி ஆணைக்குழு (National Apprentice and Industrial Training Authority) | 1. பாடசாலை விலகியவர்களுக்கு பல்வேறு தொழிற்கல்விக் கற்கைகளை ஏற்பாடு செய்தல்<br>2. வெவ்வேறு தொழில்களுக்கு திறமையான தொழிலாளர்களை ஈர்ப்பதன் மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்<br>3. தொழில்களில் சேவை நியமங்களை உருவாக்குதல் |
| தேசிய வணிக முகாமைத்துவ நிறுவகம் (National Institute of Business Management) | 1. முகாமை விருத்தி - பொது மற்றும் தனியார் துறை முகாமையாளர்கள் மற்றும் தொடர்புடைய மேற்பார்வை அதிகாரிகளுக்குப் பயிற்சியளித்தல்<br>2. முகாமை ஆராய்ச்சிகளை நடாத்துதல் - தொடர்புடைய துறையில் தரவுகளை சேகரித்து ஆராய்ச்சிகளை நடாத்துதல்<br>3. கணினி சேவைகள் - ஒப்பந்த முறையின் கீழ் உள்ள வேறுபட்ட நிறுவனங்களுக்காக பயிற்சிநெறி வகுப்புக்களை உருவாக்குதல் மற்றும் பல்வேறு கணினி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல் |

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

SRI LANKA

***வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

| ***அத்தியாயம் 03 – வணிகத்தின் துணைச்சேவைகள்*** |
| --- |

**(a) ஒரு சிறந்த போக்குவரத்து முறைமையின் பண்புகள்**

1. வேகம்
2. பாதுகாப்பு
3. குறைந்த கிரயம்
4. இயலளவு
5. கிடைப்பனவு
6. நியமம் மற்றும் சர்வதேச மரபுகள்
7. சட்டபூர்வத்தன்மை

*(03 புள்ளிகள்)*

**(b) வணிக வங்கிகளால் வழங்கப்படும் ஏனைய சேவைகள்**

1. வங்கி வரைவோலைகளை வழங்குதல்
2. காசோலைகளின் தீர்த்தல் அல்லது காசோலைகளின் மதிப்பிழக்கச் செய்தல்
3. நிலையியற் கட்டளைகளை நிறைவேற்றுதல்
4. பணம் அனுப்புதல்
5. நாணயக் கடிதங்களை வழங்குதல்
6. பங்கு எழுத்துறுதி
7. குத்தகை சேவைகள்
8. அந்நிய செலாவணியைக் கொள்வனவு மற்றும் விற்பனை செய்தல்
9. முகவர் சேவைகள்
10. அடகு சேவைகள்
11. தொலைபேசி வங்கியியல்
12. இணைய வங்கியியல்
13. வங்கிக் கடன்கள்

*(03 புள்ளிகள்)*

**(c)**

தொழில் முயற்சியாண்மை என்பது புதுமைபுரிதல் மற்றும் இடரை முகாமை செய்தல் மற்றும் மனிதத் தேவைகளைத் திருப்தி செய்யும் முழுமையான செயற்பாடாகும். வணிகம் என்பது மனித தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலான உற்பத்தி, விநியோகம் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள் என வரையறுக்கப்படுகிறது. தொழில் முயற்சியாண்மையானது புதுமைகள் மற்றும் படைப்பாற்றல் மூலம் வணிகத்தை உருவாக்குகிறது. ***ஒரு வணிகத்தைத் தொடங்குவதற்கு, தொழில் முயற்சியாளர்கள் வாய்ப்புகளை அடையாளம் கண்டு, புதுமைகள் மூலம் ஆக்கப்பூர்வமாக அவற்றைப் பயன்படுத்துதல் வேண்டும்.*** எனவே, மனித தேவைகளைத் திருப்தி செய்வதில், தொழில் முயற்சியாண்மையானது வணிக வாய்ப்புகளை அடையாளம் காணுதல், இடர் முகாமை மற்றும் புதுமை திட்டமிடல் ஆகியவற்றில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்பது தெளிவாகிறது. வணிகங்கள் பெரும்பாலும் அந்தப் புத்தாக்கங்களை வணிகமாக்குகின்றன. எனினும், அனைத்து வணிகங்களும் முயற்சியாண்மை அல்ல, ஆனால் அனைத்து தொழில்முனைவோரும் வணிகங்களை உருவாக்குகிறார்கள் என்பது தெளிவாக உள்ளது.

இதன் பொருள் வணிக உலகில் உள்ள வணிகங்கள் அனைத்துமே தொழில் முயற்சியாண்மை முயற்சிகள் அல்ல, ஆயினும்கூட அதை செய்வதற்காக, ஒரு வணிகம் மற்றொரு வணிகத்தைத் தொடங்கும் அல்லது கொண்டுநடாத்தும். எனினும், அவர்கள் அனைவருமே தொழில்முனைவோர் அல்ல, அவர்கள் புதிய வாய்ப்புகளை உருவாக்குவதும் குறைவதும் இல்லை படைப்பாற்றல் அல்லது புதுமையைக் கொண்டிருப்பதும் இல்லை, அவை வெறும் வணிக முயற்சிகள் மாத்திரமே.

aat SRI LANKA

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

***பிரிவு B முடிவு***

***வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**(a) ஒரு வணிகத்தை நெறிமுறையாக நடாத்தும்போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள்:**

1. வணிகத்தின் தன்மை
2. வணிகத்தின் உரிமையாளர்கள், அவர்களின் அணுகுமுறைகள், உணர்வுகள், விதிமுறைகள், மதிப்புகள் போன்றவை.
3. வணிகத்தின் ஊழியர்கள், அவர்களின் அணுகுமுறைகள், உணர்வுகள், விதிமுறைகள், மதிப்புகள் போன்றவை.
4. வாடிக்கையாளர் சேவை
5. போட்டியாளர்கள் மற்றும் அவர்களின் நோக்கங்கள்
6. வணிகத்தின் சமூக கலாச்சாரம் பற்றிய புரிதல்
7. நிறுவன கலாச்சாரம்
8. நடைமுறைப்படுத்தல் செலவு

*(03 புள்ளிகள்)*

**(b)**

**1. மேம்படுத்தப்பட்ட வினைத்திறன்**

C Soft இல் புதிய தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவது அதன் வினைத்திறனை மேம்படுத்தி, செயன்முறையை விரைவுபடுத்தும். இதன் விளைவாக, நடைமுறைப்படுத்தப்பட்ட கணினி முறைமையில் கட்டளைகள் தானாகவே வைக்கப்பட்டு, உற்பத்தியின் சீரான இயக்கத்தை அனுபவிக்க முடியும்.

aat SRI LANKA

**2. உற்பத்திக் கிரயத்தைக் குறைத்தல்**

புதிய தொழிநுட்பத்தின் பயன்பாடு உற்பத்தி மற்றும் விநியோக செலவுகளைக் குறைத்து நிறுவனம் அதிக இலாப எல்லையைக் கொண்டிருக்க அனுமதிக்கும்.

**3. நிறுவன உற்பத்தித்திறனை அதிகரிக்கும்**

புதிய தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவது நிறுவனம் புதிய சந்தைகள் மற்றும் துண்டங்களை மேலதிக செலவுகள் இல்லாமல் எளிதாக அணுக உதவுகிறது. தரவு சார்ந்த பயன்பாடுகள் மூலம் எளிதாக பணம் செலுத்துதல் மற்றும் சந்தை நடத்தையை கண்காணித்தல் ஆகியன சந்தை ஆராய்ச்சியையும் எளிதாக்குகின்றன.

**4. சூழல் நட்புறவான முகாமை**

புதிய தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம், நிறுவனம் கழிவுகளை பயனுள்ள, சுற்றுச்சூழல் சிநேகமான முறையில் முகாமை செய்ய அனுமதிக்கிறது. உதாரணமாக, நிறுவனம் அந்த நோக்கத்திற்காக கழிவு நீர் சுத்திகரிப்பு முறையை நிறுவியுள்ளது.

**5. இணையவழி ஊடுசெயல்களைக் கண்காணிக்கும் இயலுமை**

**6. வணிகத்திற்கான கைத்தொலைபேசி செயலியை உருவாக்கும் இயலுமை**

**7. உயர்தர விரைவான வாடிக்கையாளர் ஆதரவு சேவைகளை வழங்கும் இயலுமை**

***(05 புள்ளிகள்)***

**(c)**

1. மீள்சுழற்சி செயன்முறையின் பயன்பாடு [கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் போன்றவை]
2. கழிவுகளின் சரியான முகாமை [குறிப்பாக, இரசாயனக் கழிவுகள் மற்றும் இ-கழிவுகள்]
3. ஒழுங்குமுறை அதிகாரசபைகளிடமிருந்து சமீபத்திய அறிவுறுத்தல்களைப் பெறுதல்
4. பசுமை பொருட்கள் மற்றும் சுற்றுச்சூழல் நட்பான பச்சை பொதியிடலுக்கு மாறுதல்
5. சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் செயல்களில் இருந்து விடுபடுதல்
6. சுற்றுச்சூழலில் ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும் உற்பத்தி செயன்முறைகளைத் திட்டமிடுதல்.
7. பசுமை உற்பத்திகளுக்கு நகர்தல் மற்றும் உற்பத்தி செயன்முறையின் போது பசுமைக் கொள்கையைப் பின்பற்றுதல்.
8. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த அறிவை சேகரித்து திட்டங்களை செயல்படுத்துதல்.
9. பொதிகளை அகற்றுவதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு ஏற்படத்தக்க இடர்களைத் தடுக்கும் வகையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொதியிடல் முறைமையைப் பயன்படுத்துதல்.
10. சுற்றுச்சூழல் தொடர்பான ஒழுங்குமுறை நிறுவனங்களிடமிருந்து தேவையான அறிவுறுத்தல்களைப் பெறுதல்.
11. வணிகத்தின் இறுதிக் கணக்கில் சுற்றுச்சூழல் அறிக்கையையும் உள்ளடக்குதல்

***(04 புள்ளிகள்)***

**(d)** - வியாங்கொடை ஓயாவினால் எல்லையிடப்பட்ட வியாங்கொடையிலுள்ள 13 ஏக்கர் நிலம்

- ஒரு குறிப்பிட்ட வாரத்துக்கான பழங்களின் தேவைகளைக் குறிக்கும் கணினிப் பிரயோகம்
- உற்பத்தி ஆலை
- ஊழியர்கள் [தொழிலாளர் காரணி]
- தொழில்முயற்சியாண்மை

***(03 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(e)**

“சமூகம்” என்ற சொல்லை ஒரு நிறுவனம் நேரடி வணிக உறவு இல்லாத உறவு வகையான உறவினைக் கொண்டுள்ள அனைவரையும் உள்ளடக்கியதாக எடுத்துக்கொள்ளலாம். இதில் வணிகங்கள் செயற்படும் உள்நாட்டுப் பிரிவிலுள்ள சமூகங்கள், அத்துடன் குறிப்பிட்ட வகை வணிகம் அல்லது அதன் செயற்பாடுகளின் தாக்கம் ஆகியவற்றுடன் தொடர்புடைய, பொதுவாக சூழல் மீது ஒட்டுமொத்தமாக ஆர்வம் கொண்ட பல்வேறு வகையான அழுத்தம் மற்றும் ஆர்வக் குழுக்களின் வீச்சினை உள்ளடக்கும். உள்நாட்டு சமூகத்தைப் பொறுத்தவரையில், வணிகத்தின் ஒட்டுமொத்த செயற்றிறன் உள்நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுபீட்சத்தின் மீது தாக்கத்தினைக் கொண்டிருப்பதனால், அவற்றின் மீது முக்கிய கவனம் காணப்படும். பல சிறிய உள்நாட்டு வணிகங்களின் வெற்றி பெரிய உள்நாட்டு வணிகங்களின் வெற்றி மற்றும் நிலைத்திருப்புடன் இணைக்கப்பட்டிருக்கலாம். இருப்பினும், உள்நாட்டு சமூகத்தை பாதிக்கும் மாசுபாடு, போக்குவரத்து ஓட்டங்கள் போன்ற வாழ்க்கைத் தரம் தொடர்பான பிற சிக்கல்களும் காணப்படலாம்.

C Soft இனைப் பொறுத்தவரை, சமூகம் ஒரு முக்கிய நாட்டதாரராகக் கருதப்படுகிறது. உண்மையில், எந்த வணிகமும் ஒரு சமூக வெற்றிடத்தில் நிலைத்திருக்க முடியாது. C Soft உடன் தொடர்புபட்டுள்ள அனைத்து வழங்குனர்கள், விநியோகஸ்தர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பிற நிறுவனங்கள் ஆகியோர் பொது சமூகத்தின் முகவர்களாவர். உள்ளீடுகள் சமூகத்திலிருந்தே எடுக்கப்படுகின்றன, வெளியீடு சமூகத்திற்கே விற்கப்படுகிறது, ஊழியர்கள் சமூகத்திலிருந்தே வருகிறார்கள், கழிவுகள் சமூகத்திலேயே அகற்றப்படுகின்றன. மேலும், நிறுவனத்தைச் சுற்றியுள்ள கிராமங்கள் C Soft மற்றும் அதன் கழிவுகளின் முகாமை செயற்பாடுகளில் அக்கறை கொண்டுள்ளன. எனவே, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க C Soft முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும், குறிப்பாக நீர் வளம் மற்றும் அதன் வணிக நடவடிக்கைகளைச் சூழவுள்ள கிராமங்களின் பொது நலன் போன்றவை.

*(05 புள்ளிகள்)*
*(மொத்தம் 20 புள்ளிகள்)*

***பிரிவு C முடிவு***

## *Notice:*

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*